# திராவிட மொழிகளின் ஒப்புமைகள்.

## இடப்பெயர்கள்.

1. இடப்பெயர்கள் குறித்து கட்டுரை வரைக.

முன்னுரை:

மாற்றுப் பெயர்களான இடப் பெயர்கள் தொன்மையான இலக்கணக் கூறுகளைக் கொண்டுள்ளது. திராவிட மொழிகளின் ஒற்றுமைக் கூறுகளை விளக்கிக் காட்டுகின்றது. இடப் பெயர்கள் குறித்து இங்கு காண்போம்.

இடப் பெயர்கள்:

திராவிட மொழிகளில்

* தன்மை,
* முன்னிலை,
* படர்க்கை என்னும் பெயர்கள்

உள்ளன.

இவை ஏழு வேற்றுமையும், உடைமைப் பொருளான ஆறாம் வேற்றுமையும் ஏற்பதால் இதில்,

* எழுவாய் வடிவம்,
* வேற்றுமை ஏற்கும் வடிவம்

என்னும் இரு வடிவங்கள் உள்ளன.

எழுவாய் வடிவம் உயிர் நீண்டும், வேற்றுமை ஏற்கும்வடிவம் உயிர் குறுகியும் காணப்படும்.

தன்மை ஒருமை:

| மொழி | எழுவாய் வடிவம் | வேற்றுமை ஏற்கும் வடிவம் |
|---|---|---|
| தமிழ் | யான், நான் | என் |
| மலையாளம் | ஞான் | என் |

| | | |
|---|---|---|
| தோடா | அன் | என் |
| கோடா | இன் | ஏன் |
| கொடகு | நானு | ஏன் |
| கொலாமி | அன் | அன் |
| குருக் | ஏன் | எங்க் |

தன்மை பன்மை:

| | | |
|---|---|---|
| தமிழ் | யாம் | எம் |
| மலையாளம் | நாம் | நம் |
| தெலுங்கு | மேமு | மம் |
| கொலாமி | ஆம் | எம் |

முன்னிலை ஒருமை:

| | | |
|---|---|---|
| தமிழ் | நீ | நின், உன் |
| மலையாளம் | நீ | நின் |
| துளு | ஈ | நின் |
| கொலாமி | நீவ் | இன் |

முன்னிலைப் பன்மை:

| | | |
|---|---|---|
| தமிழ் | நீர் | நும் |
| கோடா | நீம் | நிம் |
| கன்னடம் | நீம் | நிம் |
| கடபா | ஈம் | இம் |

தன்மை ஒருமைப் பெயர்கள்:

திராவிட மொழிகளில் யான், நான், அவன், இவன், ஏது, அது போன்ற தன்மை ஒருமைப் பெயர்கள் உள்ளன.

தொல்காப்பியர் 'யான்' என்ற தன்மை ஒருமை வடிவத்தை குறிப்பிடுகிறார்.

நன்னூலார் 'யான்', 'நான்' என்ற வடிவங்களைக் குறிப்பிடுகிறார்.

தன்மை, பன்மை வடிவமாக 'யாம்', 'நாம்' என்பனவற்றைத் தொல்காப்பியர், நன்னூலார் இருவரும் குறிப்பிடுகின்றனர்.

தன்மை:

தன்மைப் பன்மைப் பெயர்கள்

* வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை,
* உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

என்ற இரு வகைகள் உண்டு

வெளிப்பாட்டுத் தன்மைப் பெயர்கள் கேட்போரை நீக்கி ஏனையோரை உளக்கிக் காட்டும்.

உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர்கள் கேட்போரான முன்னிலையாரையும் உளப்படுத்தி நிற்கிறது.

'யான்' என்பது உளப்பாட்டுத் தன்மைப் பெயராகவும்,

'யாங்கள்', 'நாங்கள்' என்பது வெளிப்பாட்டுத் தன்மைப் பெயராகவும் உள்ளது.

வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை:

| மொழிகள் | எழுவாய் வடிவம் | வேற்றுமை ஏற்கும் வடிவம் |
|---|---|---|
| மலையாளம் | nannal | enna) |
| கொடகு | enga | enga |
| தெலுங்கு | nanga | nanga |
| குய | ஏமு | எம் |
| கொலாமி | மேமு | மம் |
| நாயக்கி | நேமு | எம் |
| குருக் | அம் | அம் |

| | | |
|---|---|---|
| மராட்டா | அம் | அம் |

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை:

| | | |
|---|---|---|
| தமிழ் | நாம் | நம் |
| மலையாளம் | நாம் | நம் |
| கோடா | நாவு | ந |
| தோடா | அம் | அம் |
| கன்னடம். | மனெ | மன |
| துளு | ஏம் | னம் |
| குருக் | நாம் | நம் |
| மராட்டா | நாம் | நம் |

B.h கிருஷ்ணமூர்த்தி, P.S சுப்ரமணியம் அகியோர் 'யாம்', 'நாம்' என்பதைத் தன்மைப் பன்மை வடிவமாகக் கொண்டுள்ளனர்.

முன்னிலைப் பெயர்கள்:

திராவிட மொழிகளில் இடைப் பெயர்கள் நீயிர், நீவிர் என்னும் முன்னிலைப் பெயர்களைக் குறிப்பிடுகிறது.

துளு மொழியில் நீ, நி என்பதையும்,

குருக் மொழியில் ந, நூ, நா என்பதையும் முன்னிலைப் பெயர்களாகக் கொண்டுள்ளது.

படர்க்கை இடைப் பெயர்கள்:

படர்க்கை இடைப் பெயர்கள் எனி வேற்றுமை ஏற்பதில்லை.

அவன், அவள், அவர், அது, அவை அவை போன்றவைகள் குறிப்பிடுகின்றன.

## சுட்டுப்பெயர்கள்:

சுட்டுப் பெயர்களின் அடிச்சொற்களில் பாலறிகிளவிகள் இணைந்து காட்டப்படுகின்றன.

தமிழில் 'அகரம்' சேய்மைச் சுட்டுப் பெயராகவும், 'இகரம்' அண்மைச் சுட்டுப் பெயராகவும் இருக்கின்றது.

தமிழைப் போன்ற பிற மொழிகளிலும் அண்மை, சேய்மை இரண்டுக்கும் இடையில் நிற்பவரைச் சுட்ட 'உகரம்' பயன்படுத்தப்படுகின்றன.

## வினாப் பெயர்கள்:

வினாப் பெயர்களின் அடிச்சொற்களில் பாலறிகிளவிகள் இணைந்து காட்டப்படுகின்றன. யார், எது, எவை, எ என்பன வினாப் பெயர்களாகக் கூறப்படுகின்றன.

| | |
|---|---|
| தமிழ் | யார் |
| மலையாளம் | ஏது |
| கோட | யார் |
| துடு | யார் |

## பெயரடைகள்:

பெயரைச் சிறப்பிக்க வரும் இலக்கணக் கூறுகள் 'பெயரடைகள்' எனும்.

தமிழில் 'அகரம்' பெயரடை உருபாக வருகின்றது.

தமிழ் - நல்ல
பெரிய

மலையாளம் - நல்ல

கொடு - ஸங்க

ஐய மொழியல் 'ஐகரம்' பெயரடை உருபாக உள்ளது.

ஐய - பெரிய
சிறிய

சிலவிடங்களில் பெயரே பெயரடை உருபாக வந்து சிறப்பாக உள்ளது.

பண்புச் சொற்களும் பெயரடை உருபாக வருகின்றன.

நன்றால்

பெயரெச்சங்களும் பெயரடை உருபாக வருகின்றது.

படித்த பாடம்

தமிழில் 'சில்', 'பல்' போன்ற சொற்களில் அகரம் இணைந்து 'சில', 'பல' என்று வருகின்றது.

முடிவுரை:

இவ்வாறு இடைப் பெயர்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்றிடங்களிலும், சுட்டுப் பெயராகவும், வினாப் பெயராகவும், பெயரடைகளாகவும் அமைந்து சிறப்பாக உள்ளன.

இவையும் தமிழின் சிறப்பைத் தன்மைக்கு பறைசாற்றும் ஒரு சான்றாக அமைகின்றது.